Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 கார்த்திகை 21 வியாழக்கிழமை (7-12-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 11

## ஜாதிக சிந்தன பிரமுகர் கருத்து

அரசின் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை ஏற்றுக் கொள்ள தென்பகுதிச் சிங்கள மக்கள் தயாரில்லை- என்று ''ஜாதிக சிந்தன'' அமைப்பின் அமைப்பாளர் டாக்டர் குணதாஸ அமரசேகர தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வுத் திட்டத்தை அமுல்செய்ய பொருத்தமான சூழ்நிலை மக்கள் மத்தியில் இல்லை- என்றும் அவர் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த வெற்றியைக் கொண்டாட வேண்டியதே முக்கியமானது என்றும் அவர் தெரிவித்தார் (ஐ-6)

# — கிழக்கில் கரும்புலித் தாக்குதல் —

# அதிரடி படையினரின் முகாம் மட்டக்களப்பில் தகர்ப்பு!

## 40க்கு மேற்பட்ட படையினர் பலி பவள் கவசவாகனங்கள் அழிப்பு

சாவகச்சேரி, டிசம்பர் 7

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு விசேட அதிரடிப்படை முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய கரும்புலித் தாக்குதலையும் அதைத் தொடர்ந்து சுமார் மூன்றரை மணி நேரம் நடத்தப்பட்ட புலிகளின் சிறப்பு அணிகளின் தாக்குதலையும் அடுத்து அந்த முகாம் தகர்க்கப்பட்டது.

இத்தாக்குதலில் நாற்பதுக்கும் மேற்பட்ட அதிரடிப் படையினர் பலியாகினர்; மேலும் பல படையினர் படுகாயமடைந்தனர், மூன்று பவள் கவச வாகனங்கள் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டன, பெருமளவு நவீனரக ஆயுதங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றினர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.05 மணியளவில் கரும்புலி மேஜர் தினேஷ்குமார் (அல்லது ரங்கன்) இந்த முகாம் மீது கரும்புலித் தாக்குதலை நடத்தினார் என்றும்— அதையடுத்து விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணியினர் இந்த முகாம் மீது தாக்குதலைத் தொடர்ந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலி ரங்கன் உட்பட 24 புலிகள் வீரச்சாவு

சாவகச்சேரி, டிச. 7

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு அதிரடிப்படை முகாம் தகர்க்கப்பட்ட சம்பவத்தில் கரும்புலி மேஜர் தினேஷ்குமார் (அல்லது ரங்கன்)உட்பட 24 போராளிகள் வீரச்சாவடைந்ததாக விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்தது.

வீரச்சாவடைந்த ஏனைய போராளிகளின் விபரம் வருமாறு:-

- ★ கப்டன் ரகுநாதன்
- ★ கப்டன் ஜானகிராமன்
- ★ லெப்டினன்ட் யோகசீலன்
- ★ லெப்டினன்ட் விஜி
- ★ லெப்டினன்ட் சிவசங்கர்
- ★ லெப்டினன்ட் நடராஜா
- ★ லெப்டினன்ட் வெங்கட்ராஜ்
- ★ லெப்டினன்ட் ரமணிதரன்
- ★ லெப்டினன்ட் சுடர்மணி
- ★ லெப்டினன்ட் காளி
- ★ இரண்டாம் லெப்டினன்ட் இதயபல்லவன்
- ★ இரண்டாம் லெப்டினன்ட் அறிவு
- ★ இரண்டாம் லெப்டினன்ட் குட்டிமணி
- ★ இரண்டாம் லெப்டி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம்

சாவகச்சேரி, டிச, 7

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு அதிரடிப்படை முகாம் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு!-

| | | |
|---|---|---|
| ★ ஆர். பி ஜி. | — | 01 |
| ★ ஆம்கோர் டொங்கான் | — | 01 |
| ★ கோல் கொமாண்டோ | — | 08 |
| ★ ஏ. கே. ரகத் துப்பாக்கி | — | 16 |
| ★ ஆர். பி. ஜி. ஷெல் | — | 01 |
| ★ கோல் கொமாண்டோ மகஸின் | — | 16 |
| ★ 40 எம். எம். ஷெல் | — | 15 |
| ★ செற் | — | 01 |
| ★ வோக்கி | — | 01 |
| ★ ஏ. கே. மகஸின் | — | 18 |
| ★ 5. 56 ரக ரவை | — | 365 |
| ★ ஐ. எம். ரவை | — | 895 |

(உ-3)

## கடும் பாதுகாப்புக்கு மத்தியில் சந்திரிகா உரை

கொழும்பு, டிச. 7

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று பழைய நாடாளுமன்றக் கட்டடத்தில் உள்ள ஜனாதிபதி செயலகத்தில் இருந்து நாட்டு மக்களுக்கு உரையாற்றிய வேளை கொழும்பில் இதற்கு முன்பு என்றுமே இருந்திராத வகையில் பாதுகாப்பு மிகவும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

பழைய நாடாளுமன்றக் கட்டடம் அமைந்திருக்கும் காலி வீதி போக்குவரத்துக்கு முற்றாக மூடப்பட்டிருந்தது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் அனுருத்தவுக்கு சந்திரிகா புகழாரம்!

கொழும்பு, டிச. 7

யுத்தத்துக்கு சிறந்த தலைமைத்துவத்தை வழங்கியமைக்காக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா புகழாரம் சூட்டியுள்ளார்.

நேற்று நாட்டு மக்களுக்கு தாம் ஆற்றிய விசேட உரையிலேயே அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கு ஜனாதிபதி புகழாரம் சூட்டினார்.

''சகல போராட்டங்களின் போதும் வீரம் மிக்க தலைமைத்துவத்தைக் கொடுத்து மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கு தனிப்பட்ட முறையிலும், அரசாங்கத்தின் சார்பிலும், நாட்டு மக்கள் சார்பிலும் எனது மரியாதையைச் செலுத்துகிறேன்'' —என்று ஜனாதிபதி தனது உரையில் கூறினார். (ஐ)

## படையினரின் பெற்றோர் உட்பட

# வெற்றிக்கு உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றார் சந்திரிகா!

### நேற்று நாட்டுமக்களுக்கு உரை

கொழும்பு டிச. 7

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் போரில் உதவிய பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை, முப்படையினர், பொலீஸார் மற்றும் அந்த வீரப்புதல்வர்களைத் தந்த பெற்றோர் ஆகியோருக்கு எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

— இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நேற்று ஜனாதிபதி செயலகத்தில் — முப்படைத் தளபதிகள் மற்றும் பொலீஸ் மா அதிபர் ஆகியோர் பின்னால் அணிவகுத்து நிற்க — நாட்டு மக்களுக்கு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது ஸ்ரீலங்காவின் புதிய

( 6ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி பகுதி மீது ஷெல் வீச்சு

வடமராட்சி, டிச. 7

வடமராட்சி வடக்குகரையோரப் பகுதியை நோக்கி நேற்று முன்தினம் இரவும் நேற்று அதிகாலையும் பலாலி முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

வல்வெட்டித்துறை, ஊறணி, திக்கம் ஆகிய பகுதிகளில் [illegible] வீடுகள் சேதமடைந்தன. (ஐ-173)

## புலிகளுடன் இணைவோர் வன்னியில் அதிகரிப்பு

சாவகச்சேரி, டிச. 7

மண்மீட்புப் போரில் ஈடுபட வன்னிப் பகுதியில் பெரும் எண்ணிக்கையானவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இளைஞர்கள், யுவதிகள், மாணவர்கள் என்று ஏராளமானவர்கள் தினமும் விடுதலைப் புலிகளுடன் இணைவதாக தெரிவிக்கப்பட்டது.

வன்னிக்கு இடம் பெயர்ந்து சென்றுள்ளவர்களே விடுதலைப் புலிகளுடன் இணைவதில் ஆர்வம் காட்டுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதே நேரம் குடாநாட்டிலும் ஏராளமானவர்கள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து வருகின்றனர்.

## கல்விசார் அமைப்புகளை வன்னிக்கு மாற்ற முடிவு

குடாநாட்டில் பணியாற்றும் கல்விசார் உத்தியோகஸ்தர்கள், கல்விமான்கள் வன்னியில் பணியாற்றுவது என்று நேற்று முடிவு செய்தனர்.

நேற்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இது தொடர்பாக நடந்த கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

வன்னி மாவட்டத்தில் பாடசாலைகளை இயக்குதல், கல்விப் போதனைகளை மேற்கொள்ளல், இருப்பிட வசதிகளை அளித்தல் போன்ற விடயங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டன.

கல்விப் பணிகளை வன்னிப் பகுதியில் முழுமையாக மேற்கொள்வது என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கல்விசார் அமைப்புக்கள் விரைவில் வன்னிக்கு மாற விருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடமராட்சி பகுதியில்

# புலிகளுடன் சேர்வதில் மாணவர்கள் ஆர்வம்

வடமராட்சிப் பகுதியில் மாணவர்கள் பலர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைவதில் பெரிதும் ஆர்வமும் அக்கறையும் காட்டி வருகிறார்கள்.

சரவணையிலிருந்து இடம் பெயர்ந்து நாவற்குழி இடம் பெயர்ந்தோர் முகாமில் தங்கியிருந்த யாழ். மத்திய கல்லூரி மாணவனான சண்முகநாதன் கவிராஜ் (15 வயது), மணல்காட்டைச் சேர்ந்த எட்டாம் வகுப்பு மாணவனான யோகராசா அமலதாஸ் ஆகிய இருவரும் பருத்தித்துறை முதலாம் கட்டையிலுள்ள புதிய போராளிகள் இணையும் செயலகத்தில் நேற்று புதிய போராளிகளாக இணைந்து கொண்டார்கள்.

கடந்த வாரம் இதே போன்று பல மாணவர்கள் புதிய போராளிகளாக இணைந்து கொண்டதாக புதிய போராளிகள் இணையும் செயலகத்தினர் தெரிவித்தனர். (ஐ-173)

# ★ இடம் பெயர்ந்து சென்ற முஸ்லிம்களை வலிகாமம் பகுதியில் குடியேற்றும் முயற்சி தோல்வியில்!

கொழும்பு, டிச. 7

வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்களை யாழ்ப்பாணத்தில் படையினர் கைப்பற்றிய வலிகாமம் பகுதியில் மீளக் குடியேற்ற அரசு எடுத்த முயற்சி பயனளிக்கவில்லை என்று கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து சென்று வெளி மாவட்டங்களில் தங்கியுள்ள முஸ்லிம் மக்களை யாழ்ப்பாணத்தில் மீளக் குடியேற்ற அதிகாரிகள் மூலம் அரசு முயற்சி எடுத்ததாகவும்—

ஆனால் யாழ்ப்பாணத்துக்குச் சென்று மீளக் குடியேற முஸ்லிம்கள் மறுப்புத் தெரிவித்து விட்டதாகவும்— அத்தகவல்கள் மேலும் தெரிவித்தன.

தற்போதைய சூழ்நிலையில் எக்காரணம் கொண்டும் தாம் அங்கு செல்லத் தயாரில்லை என யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் தெரிவித்துள்ளனராம். (உ-3)

# நிவாரண பொருள்களுடன் 'கல்யாணி' நேற்று வந்தது!

வடமராட்சி, டிச. 7

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணப் பொருள்களுடன் 'லங்கா கல்யாணி' கப்பல் நேற்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

கடல் கொந்தளிப்பாக இருந்தபோதிலும் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டன.

ஆயிரம் மெற்றிக் தொன் சீனி மற்றும் அரிசி, பருப்பு, பயறு, பால்மா உட்பட பல உணவுப் பொருள்கள் இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதேவேளை —

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட 'ஹபரண' கப்பல் ஒரு தொகுதி மருந்து வகைகளுடன் இன்று பருத்தித்துறையை வந்தடையும் எனத் தெரியவந்தது. (ஐ-3-7-173)

# மட்டக்களப்பு வாவிக் கரையிலிருந்து தமிழர்களை வெளியேற உத்தரவு!

மட்டக்களப்பு, டிச. 7

மட்டக்களப்பின் வாவிக் கரையிலிருந்து தமிழ்மக்களை வெளியேறுமாறு ஸ்ரீலங்காப் படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

வாவியிலிருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் விலகி இருக்குமாறும் —

மீன்பிடி உபகரணங்கள் மற்றும் படகுகளை அப்புறப்படுத்துமாறும் —

படையினர் அறிவித்துள்ளதாக ''புலிகளின் குரல்'' நேற்று தெரிவித்தது.

இதனிடையே —

ஸ்ரீலங்காப் படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள மட்டக்களப்பு நகரில் படையினரின் மிக மோசமான துன்புறுத்தல்களுக்கு தமிழ் மக்கள் நாளாந்தம் உள்ளாகிவருகின்றனர்.

இரவு, பகலாக தேடுதல், ரோந்து ஆகியவற்றை மேற்கொள்ளும் படையினர், மக்களை அடிக்கடி வீடுகளிலிருந்து வெளியேற்றி வருவதாகவும் கைது நடவடிக்கைகள் சாதாரண விடயமாகி இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-7)

# பல்கலை ஊழியருக்கு கொடுப்பனவுகள் நிறுத்தம்

யாழ்ப்பாணம், டிச. 7

யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கான சகல கொடுப்பனவுகளும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டிருப்பதாக பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

கொடுப்பனவுகளை வழங்குவதற்கான பணம் வவுனியாவில் இருந்து எடுத்துவரப்பட்ட பின்னரே கொடுப்பனவுகளை வழங்கும் திகதி விவரம் அறிவிக்கப்படும் என்றும்—

வன்னிப் பகுதிக்கு இடம் பெயர்ந்து சென்றுள்ளவர்கள் கிளிநொச்சி விவசாய பீடத்தில் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் பதிவாளர் தெரிவித்திருக்கிறார். (ஐ)

# 6 ஆயிரம் இறாத்தல் பாண் விநியோகம்

வடமராட்சி, டிச. 7

வடமராட்சி, வடமராட்சி கிழக்கு பகுதிகளிலிருந்து தினமும் 6 ஆயிரம் இறாத்தலுக்கு மேற்பட்ட பாண் எடுத்துச் செல்லப்பட்டு தென்மராட்சிப் பகுதியில் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

வடமராட்சியிலுள்ள தனியார் வெதுப்பகங்களிலிருந்து தினமும் 3,500 இறாத்தல் பாண் புனர்வாழ்வுப் பகுதியினராலும் —

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சமாசம் தினமும் 2,500 றாத்தல் பாணைநேரடியாகவும் தென்மராட்சிப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இதுதவிர வடமராட்சிப் பகுதியிலுள்ள உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம் நெல்லியடி கட்டைவேலி ப.நோ.கூ. சங்கம் ஆகியனவும் தென்மராட்சிக்கு நேரடியாக பாண் எடுத்துச் சென்று விநியோகம் செய்கின்றன. (ஐ-173)

### எண்ணெய்க் குதத்தில் பணிபுரிந்த

# தமிழர்கள் அனைவரும் கூண்டோடு இடமாற்றம்

கொழும்பு, டிச. 7

கொலன்னாவ எண்ணெய்க் குதம் மீதான தாக்குதலையடுத்து அங்கு பணியாற்றிய தமிழர்கள் அனைவரும் பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது.

அங்கு முக்கிய பதவிகள் தொடக்கம் கீழ்மட்டம் வரை பணியாற்றிய தமிழர்கள் பெற்றோலிய கூட்டுத்தாபன தலைமையகத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளதாக தெரியவந்தது.

விநியோகம் மற்றும் செயற்பாட்டுப் பிரிவுகளில் பணியாற்றிய தமிழர்களும் இடமாற்றப்பட்டுள்ளனர். (உ-3)

# வீட்டில் திடீரெனத் தீ!

சாவகச்சேரி, டிச. 7

மட்டுவில் வடக்கு மோகனதாஸ் விளையாட்டு மைதானத்துக்கு அருகே உள்ள வீடு ஒன்றில் நேற்று மாலை திடீரெனத் தீ பற்றிக்கொண்டது.

கார்த்திகைத் தீபத் திருநாளான நேற்று அந்த வீட்டில் ஏற்றப்பட்ட தீப்பந்தம் ஒன்றில் இருந்தே வீட்டுக் கூரையில் தீ பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது.

அயலவர்களின் உதவியுடன் அந்தத் தீ அணைக்கப்பட்டது. எனினும் வீட்டுக் கூரையின் ஒரு பகுதி எரிந்து சாம்பரானது. (ஐ-31)

### படையினர் கெடுபிடியால்

# வவுனியா வரும் ரயிலில் பயணிகள் மிகக் குறைவு

வவுனியாவுக்கும் கொழும்புக்கும் இடையில் பயணம் செய்வோர் மீது படையினர் மேற்கொண்டுவரும் கெடுபிடி காரணமாக கொழும்பு — வவுனியா இடையே சேவையில் ஈடுபடும் ரயில்களில் பயணிகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்திருப்பதாக வவுனியாத் தகவல்கள் தெரிவித்தன.

கொழும்பு - வவுனியா சேவையில் ஈடுபடும் ரயில்களில் சில நேரங்களில் 5, 6 பயணிகள் மட்டுமே வவுனியாவுக்கு வருவதாகவும்—

சில நேரங்களில் பயணிகள் இன்றி வவுனியாவுக்கு ரயில் வருவதாகவும் — அங்கிருந்து வந்த பயணிகள் தெரிவித்தனர். (உ-3 )

# சந்தையில் மீன் விலை உயர்வு

வடமராட்சிப் பகுதியில் மீன் விலை உயர்ந்துள்ளது.

இதேவேளை இடம்பெயர்ந்தோர் அதிகரிப்பினால் பருத்தித்துறை மீன் சந்தையில் மீன் வாங்க வருவோரின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது. (இ-173)

# சரசாலை ஆஸ்பத்திரிக்கு எம். எஸ். எப். உதவி

சரசாலையில் உள்ள அரசினர் வைத்தியசாலைக்கு பிரான்ஸ் நாட்டின் ''எம். எஸ். எப்.'' மருத்துவ தொண்டர் நிறுவனம் ஒரு குறிப்பிட்ட தொகை மருந்து வகைகளை அன்பளிப்பாக வழங்கி உள்ளது.

வயிற்றோட்ட நோய்க்கு பயன்படுத்தப்படும் 'ஜீவனி' பைக்கட்டுகள் உட்பட பல மருந்து வகைகள் எம். எஸ். எப். அமைப்பை சேர்ந்தவர்களால் நேரடியாக இந்த வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். இராஜலிங்கத்திடம் நேற்று கையளிக்கப்பட்டன.

இவ்வைத்தியசாலையில் தினமும் 400க்கு மேற்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. (இ-135)

# பச்சை மரங்களை விறகுக்காக தறியாதீர்!

### வட்டவை பொறுப்பாளர் கோரிக்கை

எழுதுமட்டுவாள், டிச. 6

விறகுத் தேவைக்காக பச்சை மரங்களைத் தறிக்க வேண்டாம் என்று பளை வட்டத்தைச் சேர்ந்த உதவிப் பொறுப்பாளர் திரு. கீதன் கேட்டுள்ளார்.

பளை வட்டவைக்குட்பட்ட புதுக்காடு, இயக்கச்சி, தம்பகாமம் போன்ற பகுதிகளில் தினமும் ஏராளமான பச்சை மரங்கள் விறகுக்காக வெட்டப்படுகின்றன.

இடம்பெயர்ந்த மக்களால் விறகுத் தேவை அதிகரித்திருப்பினும் பச்சை மரங்களை அழிப்பது கூடாது எனவும்—

காய்ந்த மரங்களைத் தறிப்பதற்கு கட்டுப்பாடு இல்லையெனவும் அவர் தெரிவித்தார். (ஐ-[illegible])

# பாய்கள் சாப்பாட்டு தட்டு விநியோகம்

தென்மராட்சி, டிச. 7

பளை பிரதேசத்தில் உள்ள நலனோம்பு நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு வழங்கவென கெயர் நிறுவனத்தினர் பாய்களையும், சாப்பாட்டு தட்டுகளையும் தமிழர் புனர்வாழ்வுக் கழக பளைப் பிரிவி[illegible] (ஐ-[illegible])


## ACKNOWLEDGEMENT

## MRS R. VETTIVETPILLAI

We express our grateful thanks to Dr. P. Wigneswara who amidst a busy Medical practice, Spared his valuable time and energy to attend to our mother, Mrs. R. Vettivetpilla's medical and Surgical needs over decades.

We are grateful to D.M.O., Ward Staff, Medical Students of Chavakacheri Hospital and Point-Pedro Base Hospital for services rendered. The Surgical Team of Medecins Sans Frontieres deserve special mention for sustained consideration and care extended. Our Thanks to International Committee of Red Cross for their services Our gratitued to Mr. S. Nagarajah, Chavakacheri for his assistance.

We Acknowledge our deep debt of gratitude to Mr. R. Somasundram, G.S, for claiming and transporting relict from hospital, and to his friedns and relations who organized the Funeral. By his Sterling service he has distinguished himself as a Tower of strengih and beacon of hope in times of distress and turbulence.

V. KETHARANATHAN,
Cardio -Thoracic Surgeon

V. EHAMBARANATHAN

C/o R. Somasundram,
G. S.
Alvai South.

Maruthanamadam,
Chunnakam,
7-12-95

(39470)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினர் அடைந்த வெற்றியால் பேரினவாதிகள் கை ஓங்கும் நிலை

## தீர்வுத் திட்டத்தை சமர்ப்பிப்பதில் சிக்கல்

கொழும்பு, டிச. 7

''சூரியப் பிரகாசம்'' ராணுவ நடவடிக்கை மூலம் யாழ். நகர் கைப்பற்றப்பட்டது சிங்கள தீவிரவாதிகளின் கையை ஓங்கவைத்துள்ளது. இதனால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண்பதற்கான அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு எதிர்ப்புத் தோன்றலாம் என்று அஞ்சப்படுகிறது.

ஜேர்மன் வானொலி கொழும்புச் செய்தியாளர் லூசியன் ராஜகருணநாயக்கா நேற்று ஸ்ரீலங்கா பற்றிய தனது அரசியல் விமர்சனத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். நகரைக் கைப்பற்றியது மூலம் ராணுவத்தினர் எய்திய வெற்றி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்க முடியுமா? என்ற கேள்வியை எழுப்பி உள்ளது என்றும்—

விடுதலைப் புலிகளை முற்றாகத் தோற்கடிக்கும் வரை அரசியல் தீர்வுத் திட்டம் சமர்ப்பிப்பதை ஜனாதிபதி தாமதப்படுத்த வேண்டும் என்ற அபிப்பிராயம் ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்குள் இருந்து வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் கோட்டையாக விளங்கிய யாழ். நகரில் தற்போது ஸ்ரீலங்கா கொடி பறக்கிறது.

ஆவி நகரமாகக் காட்சி அளிக்கும் யாழ். நகரில் ஒரு சில நூறு குடிமக்களே இருக்கின்றனர்.

குடாநாட்டு மக்களில் பெரும்பாலானோர் குடாநாட்டுக்கு வெளியே புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தற்போது இருந்து வருகின்றனர்.

படையினர் இன்னும் ஒரு முக்கிய பிரதேசங்களான வடமராட்சியையும் தென்மராட்சியையும் கைப்பற்ற வேண்டிய நிலையில் உள்ளனர்.

இங்கு விடுதலைப் புலிகளின் பெரும் எண்ணிக்கையான நன்கு பயிற்சிபெற்ற போராளிகள் இன்னும் நிலைகொண்டுள்ளனர்.

கைப்பற்றிய பகுதிகளில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவது சந்திரிகா எதிர்நோக்கும் மற்றும் ஒரு சவால் ஆகும். மக்களை அங்கு கொண்டு வருவதிலேயே அது தங்கி உள்ளது.

ஸ்ரீலங்காப் படையில் மேலும் 10 ஆயிரம் பேரைச் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கைப்பற்றிய இடங்களைத் தக்க வைக்கவும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் தற்போது இருந்து வரும் ஏனைய பிரதேசங்களைக் கைப்பற்றவும் அரசு திட்டமிட்டுள்ளதையே இது காட்டுகிறது.

சந்திரிகா அரசு தற்போது சிங்கள தீவிரவாதிகள், அரசை சந்தேகக் கண்கொண்டு நோக்கும் தமிழர்கள் தற்போதைய வெற்றியினால் மனோபலம் அடைந்துள்ள படையினர் ஆகிய சகலதரப்பினரையும் சமாளிக்க வேண்டிய இக்கட்டான நிலையில் இருந்து வருகிறது.

இப்படி லூசியன் ராஜகருணநாயக்கா மேலும் தெரிவித்தார். (இ)

## தெய்வ ஆசி வேண்டி பலாலியில் மத வைபவம்

கொழும்பு, டிச. 7

வடக்கில் ''சூரியப் பிரகாசம்'' ராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் படையினருக்கு தெய்வ ஆசி வேண்டி நேற்று முன்தினம் பலாலி ராணுவத் தளத்தில் பிரித் ஓதும் வைபவம் இடம் பெற்றது.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை, ராணுவத் தளபதி ஜெரி டி. சில்வா, வடபிராந்தியத் தளபதி றொஹான் தளுவத்த மற்றும் பாதுகாப்புப் படையினர் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

கோட்டே நாக விகாரையின் பிரதம குரு மாதுருவாகே சோபித்த தேரர் அங்கு உரை நிகழ்த்துகையில், ''சூரியப் பிரகாசம்'' ராணுவ நடவடிக்கையின் போது பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை அடிக்கடி யுத்த முனைக்குச் சென்றது குறித்து பாராட்டுத் தெரிவித்தார். (இ)

## படையினர் வேட்டிலிருந்து தப்ப சுழி ஓடினேன்!

### கிளாலியில் தப்பியவர் தகவல்

படையினரின் வேட்டுக்களிலிருந்து தப்புவதற்காக நீருக்குள் அமிழ்ந்து சுழி ஓடினேன்.

இவ்வாறு தெரிவித்தார் கடந்த 29 ஆம் திகதி கிளாலிக் கடற்பரப்பில் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மயிரிழையில் உயிர்தப்பி வந்த மருதங்கேணியைச் சேர்ந்த படகோட்டியான சி. செபரத்தினம் (வயது 31) என்பவர்.

மேற்படி சம்பவம் பற்றி தெரிவித்ததாவது:-

சம்பவதினம் நானும் மரணமான நீதி குணநாயகம் என்பவரும் ஒரு படகில் கிளாலியில் இருந்து ஆலங்கேணி நோக்கி புறப்பட்டோம்.

அப்போது இரண்டு விசைப் படகுகள் எம்மை நோக்கி விரைந்து வந்தன.

போராளிகள்தான் வருகிறார்கள் என்று எண்ணி தொடர்ந்து படகைச் செலுத்துவதில் கவனமாக இருந்தோம்.

விசைப்படகுகள் எம்மைக் கடந்து சென்றதும் ஏனைய படகுகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யத் தொடங்கின.

நிலைமையை ஊகித்துக் கொண்ட நாம் கடலுக்குள் பாய்ந்து நீந்தத் தொடங்கினோம்.

அப்போது படையினர் எம்மை நோக்கியும் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதனை அடுத்து நாம் நீருக்குள் அமிழ்ந்து நீந்தத்தொடங்கினோம்.

சுமார் 15 நிமிடங்கள் வரை நாம் இவ்வாறு நீந்தினோம். படையினரின் துப்பாக்கி வேட்டொன்று என்னுடன் கூட நீந்தியவரின் தலையைத் தாக்கியது.

சிறிது நேரத்தின் பின் நான் வெளியே தலை நிமிர்த்திப் பார்த்தபோது விசைப்படகுகள் வேறு இரு படகுகளை நோக்கிச் செல்வதைக் கண்டேன் அந்தப் படகுகளுக்கு என்ன நேர்ந்தது என்பது எனக்குத் தெரியாது.

சுமார் 5 மணித்தியாலயங்கள் கடலில் நீந்தி ஒருவாறாக ஆலங்கேணிக் கரையை அடைந்தேன்.

இப்படி அவர் கூறினார். (இ-36)

## பாணின் விலை 7 ரூபா 25 சதம்

சாவகச்சேரி, டிச. 7

ஒரு இறாத்தல் பாணின் விலை 25 சதத்தால் அதிகரிக்கப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது

இதன்படி பாணின் புதிய விலை 7 ரூபா 25 சதம் ஆகும்.

மாவின் விலையை அரசு அண்மையில் உயர்த்தியுள்ளதை அடுத்தே பாணின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தேனீர் கடைகளுக்கு மா

தென்மராட்சி, டிச 7

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள தேனீர் கடைகளுக்கு சிற்றுண்டிகள் தயாரிப்பதற்காக யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் 10 மெற்றிக்தொன் மாவினை அந்தந்தப் பிரிவு வர்த்தக சங்கங்கள் மூலம் தேனீர் கடைகளுக்கு வழங்கியுள்ளார்.

மா தட்டுப்பாடு காரணமாக சிற்றுண்டிகளின் விலை அதிகரித்ததையடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ 117)

## இடம்பெயர்ந்த சீவல் தொழிலாளர் பலருக்கு வன்னியில் வேலைவாய்ப்பு

இடம்பெயர்ந்த பனைவள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்த சீவல் தொழியாளர்களில் 30 வீதமானவர்கள் வன்னியில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர் என்று பிரதிக் கூட்டுறவு ஆணையாளர் திரு. தி. சபாரத்தினம் தெரிவித்தார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு புளியங்குளம், மடு, நானாட்டான், விடத்தல்தீவு, ஆட்காட்டிவெளி ஆகிய பகுதிகளில் உள்ள சங்கங்களில் இவர்கள் அங்கத்தவர்களாக் செயல்பட தாம் [illegible]குகள் செய்துள்ளதாகவும்—

இடம்பெயர்ந்த பனைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க உறுப்பினர் அங்குள்ள சங்கங்களில் அங்கத்தவர்களாகி வேலைவாய்ப்பு பெற்றுள்ளதாகவும் — அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## இடம்பெயர்ந்த மீனவர்களுக்கு உதவி வழங்க நடவடிக்கை

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வேலைஇழந்துள்ள மீனவர் சங்கங்களின் உறுப்பினர்கள் மீனை பதனிட்டு விற்பனைசெய்ய உதவி வழங்கப்படவுள்ளது.

மீனவ சங்கங்களின் உறுப்பினர்கள் வேலை இன்றி கஷ்டப்படுவதையடுத்து, அவர்கள் மீனைக்கொள்வனவு செய்து அவற்றைப் பதனிட்டு ''பைக்கட்'' செய்து ஏனைய பகுதிகளில் விற்க கூட்டுறவுத் திணைக்களம் உதவி வழங்கி வருகிறது.

வேலை இழந்துள்ள நூற்றுக்கணக்கானவர்கள் இந்த திட்டத்தின் கீழ் பயன் பெறுவர் எனத் தெரிவிக்கப்பட்டது (இ-3)

## கூட்டுறவு சங்க ஊழியர் சிலர் வேலை இழக்கும் ஆபத்து

சாவகச்சேரி, டிச. 7

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்த கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த சுமார் 900 பேர் வேலை இழக்கும் ஆபத்து உருளாகியுள்ளதாக பிரதி கூட்டுறவு ஆணையாளர் திரு. தி. சபாரத்தினம் தெரிவித்தார்.

ப. நோ. கூ. சங்கங்களில் பணியாற்றிய 500 ஊழியர்களும் —

பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றிய 400 ஊழியர்களும் — வேலை இழக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

வேலை இழக்கும் இவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கில் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பேக்கறி, அங்காடி வியாபாரம், உணவகங்கள், சிறுகைத்தொழில் ஆகியவற்றை அவர்கள் ஆரம்பிக்க உதவி செய்யப்படும் என்றும் அவர் கூறினார். (இ-3)

## யாழ். செயலகத்தில் 37 அடையாள அட்டைகள்

### ஆதாரம் காட்டி பெறக்கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச 7

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இயங்கும் யாழ். மாவட்டச் செயலகத்தில் 37 பேரில் அடையாள அட்டைகள் இருப்பதாகவும்—

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி அவற்றைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றுள் திகதி காலாவதியாகி புதுப்பிக்கப்பட்ட அடையாள அட்டைகள், புதிதாக விண்ணப்பித்து பெற்ற அடையாள அட்டைகள் தொலைந்து போய் மீண்டும் விண்ணப்பித்து பெற்ற அடையாள அட்டைகளுக்கு உரிய 37 பேரின் விபரம் வருமாறு:-

வேலாயுதபிள்ளை பரமலிங்கம்— அத்தியடி, பாவியங்பிள்ளை அலோசியஸ் — திருநகர்,

செபமாலை மர்லின் பெர்னான்டோ — திருநகர், ரெட்ணசிங்கம் ரவேந்திரன் — குருநகர், யுனிபஸ் சீசர்— குருநகர், அகஸ்ரின் வில்சன் — மடம் வீதி,

கணேசரத்தினம் சறோஜினிதேவி — வண்ணார் பண்ணை, மனுவேல்பிள்ளை மேரி மேற்றில்டா — 3 ஆம் குறுக்குத் தெரு, எட்மன்ட் ரோலன்ட் அலஜியம்போல் — கொய்யாத்தோட்டம் மேற்கு, நல்லதம்பி தங்கராசா— (காரைநகர்) கொட்டடி, சையோகநாதன் மங்கையர்க்கரசி — (மண்டைதீவு) ஈச்சமோட்டை, தங்கராஜா அன்பானந்தன் — மருதடி வீதி, சிமியோன் மரின் அல்டோல்ஸ் லிகோரி — கொழும்புத்துறை, வில்லியம் அன்ரன் — குருநகர், பொன்னம்பலம் சிவஞானம் — அரியாலை, செபஸ்தி அந்தேனிமுத்து — (மண்டைதீவு) பாஷையூர், த. மேரி அன்ரனிற்றா — யாழ்ப்பாணம், விக்னேஸ்வரராஜா கமலாதேவி — கோவில் வீதி, இராசையா சுந்தர லிங்கம்— (புங்குடுதீவு) வண்ணார் பண்ணை, இளையதம்பி மாகலிங்கம் — லோட்டஸ் வீதி,

சின்னராசா செல்வரட்ணம் — கே. கே. எஸ். வீதி, குமாரசாமி கனகேந்திரம்— கொழும்புத்துறை, செல்லையா யோகராசா— ஸ்ரான்லி வீதி, மரியாம்பிள்ளை வர்னகுலசிங்கம் — தொடர்மாடி, சாமுவேல் அன்ரனி—நாவாந்துறை, டென்சில் சேவியர் மேரி றோஸ்—குருநகர், சரவணபவன் சரஸ்வதி—கொழும்புத்துறை, ஜெயசீலன் திரேசம்மா —குருநகர், பேணாடேற் அம்மா அந்தோனிப்பிள்ளை —பாஷையூர், சிவசம்பு பத்ம சறோஜினி—கொழும்புத்துறை.

யேட்ஸ் யேசுதாசன்—குருநகர், ஆசீர்வாதம் அந்தோனி— குருநகர், சில்வெஸ்ரர் ஜெர்மானிஸ் — கொழும்புத்துறை, சிறிஸ்லோகாஸ் நியூட்டன் ஜெனநாதன் — சுண்டுக்குளி, குனரத்தினம் குணசீலன் - கொழும்புத்துறை, சூரியபிரபா சுப்பிரமணியம் — அத்தியடி, இராமலிங்கம் வீரசிங்கம் — சந்தன மாதா கோவில் ஒழுங்கை. (இ)

## மருத்துவ நிலையம்

எழுதுமட்டுவாள் ஸ்ரீகணேச வித்தியாலய ஆய்வு கூடத்தில் அரசினர் மருத்துவ நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள மக்களில் ஏராளமானோர் காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற வியாதிகளுக்காக தினமும் இங்கு வந்து சிகிச்சை பெறுகின்றனர். (இ-152)

## அதிபர்கள் கூட்டம்

வேலணை, ஊர்காவற்றுறை அதிபர்களுக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு சாவகச்சேரிக் கல்விக் கோட்டத்தில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation, noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


விற்பனைக்கு

ஹொண்டா E M 650 புதிய ஜெனரேற்றர், நாஷனல் G30 டெக் ஆகியன விற்பனைக்கு உண்டு. P. சிறீதரன் மாலி சந்தி, அல்வாய்.
(39454)

இன்று வியாழமாற்றம்

இன்று (7-12-95) அதி காலை 5.55 மணிக்கு குரு தனு ராசிக்கு மாற்மமடை கின்றது. எல்லா ராசிப் பலன் கள் எங்கும் விற்பனையாகின் றது விலை ரூ. 10/- கிடைக்கு மிடம் பரம்ஸ்ரோர்ஸ், சாவ கச்சேரி நூலாசிரியர் சத்யா.
(39343)

இடமாற்றம்

யாழ்.நகரில் இயங்கி வந்த ஜெயா அழகு மாடம் தற் பொழுது கண்டி வீதி, சாவகச் சேரி (கோட் முன்பாக) இயங் குகின்றது என்பதை வியா பாரிகளுக்கு அறியத்தருகின் றேன். (39332)

ஜெயா அழகு மாடம் சாவ கச்சேரி பழைய நீதி மன்றக் கட்டடத்திற்கு முன்பாக (கோட்டடி) இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர் களுக்கும் வர்த்தகப் பெரு மக்களுக்கும் அறியத் தருகின் றோம். (39317)


## மருதங்கேணி ஆஸ்பத்திரியில் நெருக்கடி

மருதங்கேணி கிராம வைத் தியசாலையில் முன்னெப் போழும் இல்லாதவாறு தற் போது நோயாளரின் எண் ணிக்கை அதிகரித்துள்ளது,

வலிகாமத்தில் இருந்து மாமுனை, செம்பியன்பற்று பகுதிகளுக்கு மக்கள் பெரு மளவில் வருவதே இதற்குக் காரணம்.

நோயாளர்கள் சிறந்த முறையில் பராமரிக்க ஆண்கள் பகுதிக்கு பரிசாரர் கள் இல்லை என்றும் —

இதனால் நோயாளர்கள் பல சிரமங்களையும் எதிர் நோக்க வேண்டியிருப்பதாக வும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-36)

# சிங்களக் கூலிப்படைகளை நாம் அடித்து விரட்டி துரத்தவேண்டும்

## போராட்டத்தில் மகனை இணைத்த தாயார் தெரிவிப்பு

எழுதுமட்டுவாள், டிச. 7

''தமிழ் மக்களை கொன் றொழித்து அவர்களின் தாயக பூமியை ஆக்கிரமிப்புச் செய்து வரும்சிங்கள கூலிப்படைகளை அடித்து விரட்டிக் கலைக்க வேண்டும். அதற்காக போரா டும் புலிகள் இயக்கத்துடன் தம்மை இணைத்துக் கொள் ளும் எனது பிள்ளைகளையிட்டு மகிழ்ச்சி கொள்கிறேன். போருக்குப் போய் வெற்றி யீட்டி வா மகனே என வீரத் திலகமிடும் தாய்மாராக நாம் வாழ வேண்டும்.''

பளை வட்டச் செயலகத் தில் விடுதலைப் போராட்டத் தில் தம்மை இணைத்துக் கொண்டுள்ள தியாகராசா சிவரஞ்சன்என்ற இளைஞனின் தாயார் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அளவெட்டியைச் சேர்ந்த இக் குடும்பத்தினர் இராணுவ நட வடிக்கைகளால் இடம் பெயர்ந்து பளை பிரதேசத் தில் இத்தாவில் கிராமத்தி லுள்ள 'சதாபுரம்' என்ற குடி யிருப்பில் வசித்து வருகின்ற னர்.

தனது மகன் போராட்டத் தில் இணைந்து கொண்டதை யிட்டு சரஸ்வதி தியாகராசா என்ற அத்தாய் நமது செய்தி யாளரிடம் பின் வருமாறு கூறி னார்.

எனக்கு நான்கு ஆண்களும் ஒரு பெண்ணுமாக ஐந்து பிள் ளைகள்.

மூத்தமகன் ஏற்கனவே போராட்டத்தில் இணைந்து சிங்களப்படைகளுடன் மோதி வீரச்சாவை எய்திவிட்டார்.

ஒரு தாய் என்ற வகையில் பாசம் மேலிட்டு, சிறு மன வருத்தத்தை கொடுத்தாலும் எனது தாயக மண்ணை மீட் கச் சென்று போராடிய என் மகனின் வீரச்செயலையும் மன உறுதியையும் எண்ணி பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

நாம் எமது தாயக மண் ணின் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டும் குடியி ருந்த வீட்டை நாம் இழந்த போது நாம் எவ்வளவுதுன்பம் இழிவு வாழ்க்கை வாழ நேரிட் டது. எமது தாயக மண்ணை இழந்தால் எமதுநிலை என்ன வாகும்? எத்தகைய அவல — அடிமை —சீரழிந்த வாழ்வை சந்திக்கவேண்டி இருக்கும் என்பதனை நாம் உணர்கி றோம்.

எமது பிள்ளைகள் சிந்திக் கத் தொடங்கி செயற்பட ஆரம்பித்துவிட்டார்கள் அவர் களின் சுதந்திர வேட்கைக்கு நாம் தடைபோடக் கூடாது. பதிலுக்கு மண்மீட்புப்போரில் வெற்றிபெற வாழ்த்தும் ஆசி

(5 ஆம் பக்கம் பார்க்க)

# இடமாற்றம் பெறும் ஆசிரியர் விவரம்

பருத்தித்துறை, டிச. 7

வடக்கு - கிழக்கு மாகாணத் துக்கு உட்பட்ட மாவட்டங்க ளுக்கிடையேயான வருடாந்த ஆசிரியர் இடமாற்றப் பட்டி யல் மாகாண கல்விப் பணிப் பாளரினால் வெளியிடப்பட் டுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி யில் இருந்து அமுலுக்கு வர வுள்ள இந்த இடமாற்றத்தின் கீழ் 97 ஆசிரியர்கள் இடமாற் றம் பெற்றுள்ளனர்.

இடமாற்றம் பெறுபவர்க ளில் ஒரு பகுதியினரின் விவரம் ஏற்கனவே உதயனில் வெளிவந்துள்ளது.

மற்றொரு பகுதியினர் விவ ரம் வருமாறு:-

தி. மோகனபாலன் — சங் கானை சிவப்பிரகாச ம. வி. — கிளிநொச்சி.

ஆ. சிறீதரன் — மல்லாகம் ம.வி. — கிளிநொச்சி.

மா. தங்கேஸ்வரன் — யூனி யன் கல்லூரி — கிளிநொச்சி.

திருமதி. கொ.ம டா பயஸ் — இளவாலை றோ.க.த.ஆ. பா. — கிளிநொச்சி.

வி. சிற்றம்பலம் — மாதகல் சென்.யோசவ் ம.வி. — கிளி நொச்சி.

திருமதி. அ. இம்மானுவேல் — சண்டிலிப்பாய் ஐசிந்தா றோ.க.த.க. — கிளிநொச்சி.

க. திருவருள் நேசன்—மகா ஜனா — கிளிநொச்சி.

திருமதி. இ. தம்பிரத்தினம் — உடுவில் நாகேஸ்வரி — கிளி நொச்சி.

திருமதி. உ. புஸ்பராஜா — அருணோதயா — வவுனியா.

செ ஏ செல்வகுமார் — ஹாட்லி — வவுனியா.

செல்வி பி. செல்லத்துரை — தம்பசிட்டி மெ.மி.த.க — வவுனியா.

தி. பாலசுப்பிரமணியம் — குடத்தனை அ. த. க. பா.— வவுனியா.

செ. பஞ்சநாதன் — சங் கானை சிவப்பிரகாச — — கிளிநொச்சி.

திருமதி. செ. சந்திரவரதன் — மூளாய் சைவப்பிரகாசா— வவுனியா.

சீ. இராஜவரோதயம் — உடுவில் கோ. காரியாலயம்— வவுனியா.

திருமதி.ச. குலசிகாமணி — மயிலணி சைவ. ம வி. — வவுனியா தெற்கு.

திருமதி. வ. நடராசா — ஸ்கந்தா — வவுனியா.

திருமதி. வி. முருகதாசன் — இளவாலை மெய்கண் டான் — வவுனியா.

செல்வி. க. கந்தையா — மல்லாகம் ம.வி. — வவுனியா

பொ. சண்முகதேவன் — யூனியன் — வவுனியாவடக்கு

செல்வி. ச. தெட்சணா மூர்த்தி — கட்டுவன்புலம் ம. வி — வவுனியா.

திருமதி.ம ம. பாலசிங்கம் — மானிப்பாய் இந்து — வவு னியா.

சி. தர்மகுலசிங்கம் — பண் டத்தரிப்பு இந்து—வவுனியா.

திருமதி. க. பெனடிக்ற் — அருணோதயா — வவுனியா.

திருமதி. சோ. திரவியம்— நவாலி ம. வி — வவுனியா.

செல்வி. சி. சிற்றம்பலம் — மாதகல் சென். யோசவ் — வவுனியா

திருமதி. செ. யோகராசா — யூனியன் — வவுனியா.

திருமதி. செ. செல்வராணி — தெல்லிப்பளை சைவப் பிரகாசா — வவுனியா.

(இ-148)

### பளை வட்டவையில்

# நவம்பரில் மட்டும் 63 பேர் போராட்டத்தில் இணைவு

எழுதுமட்டுவாள், டிச. 7

பளை வட்டவைப் பிரதேசத்தில் நவம்பர் மாதத்தில் மட்டும் 63 பேர் மண்மீட்புப் போரில் தம்மை இணைத்துக் கொண்டுள்ளனர் என்று விடுதலைப் புலிகளின் பளை வட் டவை உதவிப் பொறுப்பாளர் திரு. கீதன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் மண்மீட்பு போரின் அவசியத்தை உணர்ந்துவிட்டனர். ஆட்பலத்தின் அவசியத்தை எமது தேசியத் தலைவர் வலியுறுத்தி புலிகள் இயக்கத்துடன் இணையுமாறு விடுத்த அறைகூவலை இளைஞர்களும் யுவதி களும் ஏற்றுக்கொண்டு பெருமளவில் மண்மீட்பு போரில் தம்மை இணைத்துக் கொண்டு வருகின்றனர்.

வலிகாமம் பகுதியை ஸ்ரீலங்கா படையினர் ஆக்கிரமிக்க தொடங்கியுள்ளதை அடுத்து இடம்பெயர்ந்துள்ள அப்பகுதி மக்கள் தாயக மண்ணையும் தமது சொந்த மண்ணையும் விடுவிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளனர்.

சாதாரண குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தொடக்கம் வசதிகள் படைத்தவர்கள், திருமணமானவர்கள், தம்பதி கள், குடும்பத்தலைவர்கள், இளம்தாய்மார்கள், பலதரப் பட்டகலைஞர்கள், ஆசிரியர்கள் என பல்வேறு தரத்தின ரும் இன்று விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தம்மை இணைத்துக்கொண்டு, ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராட முன்வந்துள்ளனர்.

பெற்றோரிடத்தில் இன்று பெரும் மனமாற்றம் ஏற்பட் டுள்ளது.

தமது பிள்ளைகளை போராட்டத்துடன் இணைத்துக் கொள்ளுமாறு புத்திமதி கூறுவதுடன் நின்றுகொள்ளாமல் தாமாகவே தம் பிள்ளைகளை கூட்டிவந்து மண்மீட்புப் போரில் இணைத்து வருகின்றனர்.

போராட்ட உணர்வு மேலோங்கி நிற்பதால் விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொள்ளும் பிள்ளைகளை விடுவிப் பதற்காக அவர்கள் இப்போது முயற்சிப்பதில்லை. மாறாக தம் பிள்ளைகளிடத்தில் ஏற்பட்டுள்ள மனமாற்றத்தையிட்டு பெற்றோர்கள் மகிழ்ச்சி கொண்டுள்ளனர்.

எமது வட்டத்தில் கடந்த மாதத்தில் 26 ஆண்களும் 37 பெண்களும் விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டுள்ளனர்.

இப்படி திரு. கீதன் மேலும் தெரிவித்தார். (இ-151)


GREEN HOSPITAL CLINIC

கிறீன் வைத்தியசாலை கிளினிக்

மேற்படி வைத்திய கிளினிக் இம்மாதம் 9-12-95 சனிக்கிழமை தொடக்கம் காலை 8.30 தொடங்கி மத்தியானம் 12.30 வரை ஞாயிறு தவிர்த்து நாள் தோறும் வரணி மிஷன் வளவில் நடைபெறும்.

டாக்டர் சந்திரா அம்பலவாணர்
M.B.B.S., F.R.C.O-G

வரணி மிஷன்,
வரணி.
(39344)

யாழ். மாவட்ட
சி. க. கூ. சங்கங்களின் சமாச

அறிவித்தல்

யாழ். மாவட்ட சி. க. கூ. சங்க சமாசத்தில் கடமையாற்றும் ஊழியர்களில் இதுவரை கடமைக்கு சமூகம் அளிக்காத ஊழியர்கள் 11-12-95 ஆம் திகதிக்கு முன் சமூகம் அளிக்கவும். தவறின் தாமாகவே பதவி யில் இருந்து நீங்கியவராக கருதப்படுவர்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள
பதில் மாவட்டச் செயலாளர்,
த. நகுலேஸ்வரன்.

(39459)

வெற்றுப்போத்தல் கொள்வனவு

எமது நிறுவனம் பின்வரும் வெற்றுப் போத்தல் களை கொள்வனவு செய்கின்றது. வெற்றுப் போத் தல்களை பின்வரும் நிலையங்களில் கொடுத்துப் பணத்தைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

ஹோர்லிக்ஸ்/வீவா [பெரியது, மூடியுடன் 5/-
[பெரியது மூடிஇல்லாமல்] 2-50
ஜாம் போத்தல் ,, 6/-

போத்தல்களை சமர்ப்பிக்கவேண்டிய நிலையங்கள்

1) சுபாஸ் பேக் கவுஸ், நெல்லியடி
2) வேலவன், பருத்தித்துறை
3) செல்வராசா ஸ்ரோஸ், பருத்தித்துறை
4) ராஜேஸ்வரி, சாவகச்சேரி
5) ரேஸ்ற்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட். பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

குறிப்பு:-

தற்போது உள்ள சூழ்நிலை காரணமாக வெற்றுப் போத்தல் பரிசுக் குலுக்கல் போட்டி நிறுத்தப்பட்டுள் ளது என்பதை அறியத்தருகின்றோம்.

ரேஸ்ற் லைன் இன்ட். [தனி] லிமிட். [39482]


## நன்றி நவிலல்

### கமலாம்பாள் சுந்தரமூர்த்தி
(தொண்டமானாறு)

9- 11-95 இல் யாழ்ப்பாணம் 210, ஆஸ்பத்திரி வீதியில் காலமாகிய எங்கள் குடும்பத் தெய்வம் திருமதி கமலாம்பாள் சுந்தரமூர்த்தியின் மறைவை யொட்டி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டும் சகல உதவிகளும் புரிந்தவர்களுக்கும் பின் பருத்தித்துறையில் அனுதா பம் தெரிவித்தவர்களுக்கும் நன்றி கூறி (நாளை) 8- 12- 95 இல் பருத்தித்துறையில் நடைபெறவிருக் கும் அந்தியேட்டி வைபவத்தில் கலந்துகொள்ளு மாறு உற்றார், உறவினர், நண்பர்களை கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்
வீ. இரா. சுந்தரமூர்த்தியும்
பிள்ளைகள், மருமக்கள்

V. M. றோட்.
பருத்தித்துறை.
(39313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### காலத்துக்கு ஏற்ப சேவையாற்றுக!

வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் இயங்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளும் அலுவலகங்களும் ஆகக் குறைந்தது காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை செயலாற்ற வேண்டும் என்று வடக்கு — கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான திரு. சுந்தரம் டிவகலாலா பணித்துள்ளார்.

கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் பலரும் பிற்பகல் 2 மணியுடன் வேலைத் தலங்களை விட்டு சென்று விடுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளை அடுத்து ஆணையாளரின் இந்த பணிப்புரை வெளிவந்துள்ளது.

வலிகாமப் பகுதியில் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் ''சூரியப்பிரகாசம்'' ராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்களில் இந்த கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களும் அடங்குகின்றனர்.

ஆகவே இடம் பெயர்ந்த மக்கள் எதிர் நோக்கும் நெருக்கடிகள், பிரச்சினைகள் இவர்களுக்கும் உண்டு என்பதில் சந்தேகம் இல்லை

எனினும் கூட்டுறவுச் சங்கங்களின் சேவையின் தற்போதைய முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு சங்கப் பணியாளர்கள் சேவை மனப்பான்மையுடன் கடமையாற்ற வேண்டும்.

மக்கள் இடம் பெயர்ந்து சொல்லொணாத் துன்பங்களை எதிர் நோக்கிவரும் இக்கால கட்டத்தில், போர்க் காலச் சூழ்நிலைக்கு ஏற்ப கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் மட்டும் அல்ல சகல நிறுவனங்களின் பணியாளர்களும் செயற்பட வேண்டும்.

இடர் மிகுந்த இந்த வேளையில், நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து தமது வழமையான செயற்பாடுகளை குறைந்தளவு வசதிகளுடன் கூட்டுறவுச் சங்கங்கள் ஆற்றி வருகின்ற போதும் சீரான வேலை நேரம் ஒன்று கடைப்பிடிக்கப்படாமையால் அக்குறைபாடு வெளிக் கொணரப்பட்டுள்ளது.

கூட்டுறவுச்சங்கப் பணியாளர்கள் பிற்பகல் 2 மணியுடனேயே வேலைத் தளங்களில் இருந்து சென்று விடுவதால் பொது மக்களே பாதிக்கப்படுகின்றனர்; அத்தியாவசியச் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது பொது மக்கள் இன்னலுறுகின்றனர்.

இடம்பெயர்ந்தோர் தமது நிவாரணப் பொருள்களைப் பெறுவதற்காக கூட்டுறவுக் கடைகளையே முற்று முழுதாக நம்பி உள்ளனர். பலருக்கு வேறு வருமானமே கிடையாது.

ஆகவே தேவையான நேரத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் சேவை முழு அளவில் கிடையாது போனால் கூட்டுறவுச் சங்கங்கள் மீதான மக்களது மனக்கருத்து மிருந்த பாதகமானதாக மாறிவிடும்.

கூட்டுறவுச் சங்கங்களின் முகாமைக்குப் பொறுப்பான அனைவரும் இவ்வேளையில் அர்ப்பணிப்புடனான சேவை ஒன்றில் தமது ஆளணியினர் ஈடுபடுத்தப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

கூட்டுறவாளர்களின் நடைமுறையை ஏனைய நிறுவனங்கள், திணைக்களங்களில் பணியாற்றுவோரும் கடைப்பிடித்து சேவையாற்ற வேண்டும் என்பது காலத்தின் தேவை ஆகும்.

# மாலைதீவில் திடீரென பாதுகாப்பு தீவிரம்!

## புலிகள் ஊடுருவலாம் என எச்சரிக்கையாம்

மாலே, டிச. 7

மாலைதீவின் நிர்வாகத்துக்கு உட்பட்ட பல தீவுகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் திடீரென பலப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாலைதீவில் இருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் சகல விமானங்களும், வெளிநாடுகளில் இருந்து மாலைதீவுக்கு வரும் விமானங்களும் தலைநகர் மாலேயில் இருந்து அனுமதி அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று மாலைதீவு பாதுகாப்பு அமைச்சர் பிரிகேடியர் அப்துல் சதார் தெரிவித்தார்.

இது ஒரு தற்காலிக நடவடிக்கை என்று கூறிய அவர், இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைக்கான காரணத்தை வெளியிட மறுத்துவிட்டார்.— என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால்—

இந்து சமுத்திரப் பகுதியில் உள்ள தீவுகளில் விடுதலைப் புலிகள் படகுகள் மூலம் ஊடுருவலாம் என எச்சரிக்கப்பட்டிருப்பதை அடுத்தே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக இலங்கை வானொலி தெரிவித்தது.

(ஐ)

## வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த மாணவர்கள்

# கொழும்பில் ஜி. சீ. ஈ. பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி மறுப்பு!

கொழும்பு, டிச. 7

வடபகுதியிலிருந்து அண்மைக் காலத்தில் கொழும்புக்கு இடம்பெயர்ந்து சென்ற மாணவர்கள் சிலர் அங்கு தற்போது நடைபெற்று வரும் ஜி. சீ. ஈ. (சாதாரண) தரப் பரீட்சைக்கு தோற்ற முயற்சிக்கப்பட்டபோதும் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாக அறிய வருகின்றது.

கடந்த நான்காம் திகதி ஆரம்பமான ஜி.சீ.ஈ.(சாதாரண) பரீட்சைக்கு வடக்கில் இருந்து சென்ற பரீட்சார்த்திகள் தோற்ற அனுமதி கோரியதாகவும்.—

ஆனால் வடக்குக்கு தனியான பரீட்சை நடத்தப்படும் என்பதால் இந்தப் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்க முடியாது என்று பரீட்சைத் திணைக்களம் அவர்களுக்குத் தெரிவித்ததாகவும் மேலும் அறியவந்தது.

கடந்த 3 ஆம் திகதி நடந்த ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கும் இடம் பெயர்ந்தவர்கள் அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

# புதிய பங்கீட்டு அட்டைக்கு நாளை முதல் அரிசி, மா, சீனி

சாவகச்சேரி, டிச. 7

இடம்பெயர்ந்த மக்களுக்கான இருவார உலர் உணவு நிவாரணம் நாளை வெள்ளிக் கிழமை முதல் ப. நோ. கூ. சங்கக் கிளைகள் மூலம் விநியோகிக்கப்படவுள்ளது.

தற்சமயம் புதிதாக வழங்கப்பட்டுவரும் பங்கீட்டு அட்டைக்கே இந்த இருவார உலர் உணவு வழங்கப்படும்.

அரிசி, மா, சீனி, பருப்பு, பயறு, லக்ஸ்பிறே என்பன இம் முறை பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட உள்ளன.

குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வழங்கப்படவுள்ள உணவுப் பொருள்களின் அளவு வருமாறு:-

★ ஒரு அங்கத்தவர் கொண்ட குடும்பத்துக்கு — 5 கிலோ அரிசி, 2 கிலோ மா, 800 கிராம் சீனி, 450 கிராம் பருப்பு.

★ இரு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்துக்கு — 7 கிலோ அரிசி, 5கிலோ மா, 2கிலோ சீனி600 கிராம் பருப்பு, 250 சிராம் பயறு.

★ 3 அங்கத்தினர் குடும்பத்துக்கு — 9 கிலோ அரிசி, எட்டரைக் கிலோ மா, 3 கிலோ சீனி, 425 கிராம் பருப்பு, 225 கிராம் பயறு.

★ 4 அங்கத்தினர் குடும்பத்துக்கு — 10 கிலோ அரிசி, 7 கிலோ மா, 3 கிலோ சீனி, 800 கிராம் பருப்பு, 250 கிராம் பயறு லக்ஸ்பிறே ஒன்று.

★ 5 அங்கத்தவர்களை அல்லது அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்துக்கு — 12 கிலோ அரிசி, 9 கிலோ மா, 4 கிலோ சீனி, ஒரு கிலோ 100 கிராம் பருப்பு, 500 கிராம் பயறு, லக்ஸ்பிறே ஒன்று.

(ஐ-3-7)

## வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்தோர்

# அருகில் உள்ள ப.நோ.கூ.ச. கிளையில் நிவாரணப் பொருள்களைப் பெறலாம்

சாவகச்சேரி, டிச 7

வலிகாமம் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் தங்கியுள்ள மக்கள் தமக்குரிய உலர் உணவு மற்றும் நிவாரணப் பொருள்களை —

அவர்கள் தாம் முன்னர் வசித்த பகுதிக்குரிய ப. நோ. கூ. சங்கத்தின் ஒரு கிளையில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது அத்தகைய கிளைகள் தமது தற்போதைய வசிவிடத்துக்கு அருகில் இல்லாதவிடத்து அப்பகுதியிலுள்ள — பிறிதொரு—வலிகாமப் பகுதி கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் கிளையில் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த விடயம் தொடர்பாக நேற்று சாவகச்சேரி கூட்டுறவு அலுவலகத்தில் வடக்கு — கிழக்கு மகாண கூட்டுறவு ஆணையாளர் திரு. சு. டிவகலாலா தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் குறித்து சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக வடபிராந்திய கூட்டுறவு ஆணையாளர் திரு. சபாரட்ணம் தெரிவித்தார். (உ-7)

## ப.நோ.கூ.ச. செயற்பாட்டை ஒருங்கிணைக்க குழுக்கள்

சாவகச்சேரி, டிச. 7

வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து தற்சமயம் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் இயங்கிவரும் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக இரு செயலணிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு குழுவிலும் [illegible] அங்கம் வகிப்பர். இக்குழுக்கள் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகளை மீளாய்வு செய்து ஒருங்கிணைப்பு வேலைகளை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டது.

செயலணிக் குழுக்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த பணியாளர்களுக்கு இடையில் மாதாந்தம் கலந்துரையாடல் இடம்பெறும் என்று வடபிராந்திய கூட்டுறவு ஆணையாளர் திரு. சபாரட்ணம் தெரிவித்தார்.

(உ-7)

## பல்கலைக்கழக அனைத்து பீட மாணவருக்கு!

சாவகச்சேரி, டிச. 7

யாழ், பல்கலைக் கழக அனைத்துப் பீட மாணவர்களுக்குமான கூட்டம் நாளை வெள்ளி முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும்—

பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரியிலும் நடைபெறவிருப்பதாக பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

(ஐ)

## கலந்துரையாடல்

வடமராட்சி, டிச. 7

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள ''லாண்ட் மாஸ்ரர்'' உரிமையாளர்களை நாளை பிற்பகல் 3 மணியளவில் பருத்தித்துறை வட்டச் செயலகத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு பருத்தித்துறை வட்டப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

(உ-173)

## அகதிகளுக்கு உதவி

தென்மராட்சி, டிச. 7

பளைப் பிரதேசத்தில் நலனோம்பு நிலையங்கள் அமைக்கவென சிறுவர் பாதுகாப்பு நிதியம் பதினைந்து முகாம்கள் அமைக்கக் கூடிய கூரை விரிப்புக்களையும் — செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு முகாம்களில் விரிக்கக் கூடிய பொலித்தினையும் தமிழர் புனர்வாழ்வுக் கழக பளைப் பிரிவினரிடம் வழங்கி உள்ளன. (இ-117)

## அடையாளம் காணப்படாத சடலங்கள்

எழுதுமட்டுவாள், டிச. 7

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூன்று சடலங்கள் அரசாங்க செலவில் அடக்கம் செய்யப்பட்டன.

இவற்றில் இரண்டு சடலங்கள் வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த ராகவன் காளிமுத்து, வட்டுக்கோட்டையில் இருந்து இடம்பெயர்ந்த கணபதிப்பிள்ளை தாமோதரம் பிள்ளை ஆகியோருடையவை.

மற்றைய சடலம் கிளாலியில் இருந்து எடுத்து வரப்பட்டு நான்கு தினங்களாக அடையாளம் காணப்படாது வைக்கப்பட்டிருந்தது

(இ-152)

### சிங்களக்...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் கூறி அனுப்பிவைக்க வேண்டும்.

எனது இரண்டாவது மகனும் இப்போது போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார்.

இச் செயலையிட்டு நான் மனம் வருந்தவில்லை பெருமையடைகிறேன்.

எமது மண்ணை ஆக்கிரமித்த சிங்களப் படைகளை விரட்டி அடிக்க வேண்டும். அவ் வீரச் செயலுக்காகவே எனது மகன் போராட்டத்தில் இணைந்துள்ளார்.

எனது மகனைப்போல பலலாயிரம் வீரப்புதல்வர்கள் ஒன்று திரண்டு, எமது தேசிய தலைவரின் வழிநடத்தலில் சிங்கள படைக்கு நல்ல பாடம் புகட்டுவர்

எமது தாயக மண் நிச்சயம் விடுவிக்கப்படும். விரைவில் எமது மண்ணில் நாம் சுதந்திரமாக வாழ்வோம் என பூரணமாக நம்புகிறேன்.

எமது மண் மீட்புக்காக விடுதலை இயக்கத்தில் சேரும் எனது பிள்ளைகளின் எண்ணத்துக்கு தடையாக இருக்க மாட்டேன்.

இப்படி உறுதியாகவும் உணர்ச்சியுடனும் அந்த தாயார் கூறினார்.

(இ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைநகர் கொழும்பில்

# அரச அலுவலகங்களில் தமிழர்கள் மீது கெடுபிடி!

கொழும்பு, டிச. 7

கொழும்பில் உள்ள அரச அலுவலகங்களுக்கு செல்லும் தமிழர்கள் சந்தேகக் கண்ணோடு நோக்கப்படுவதாக தமிழ் அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரச அலுவல்களாயினும் சரி சொந்தஅலுவல்களாயினும் சரி அலுவலகங்களுக்கு செல்லும் தமிழர்கள் அங்குள்ள பாதுகாப்பு அதிகாரிகளால் கடும் சோதனைகளுக்கு உட்படுத்தப் படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அரச அலுவலகங்களுக்கு செல்லும் தமிழர்கள் வீணாக அலைக்கழிக்கப் படுவதாகவும் —

அவர்களின் வேலைகளை நிறைவேற்றிக் கொடுக்க சிங்கள அதிகாரிகள் பின்னடிப்பதாகவும்— தெரிவிக்கப் பட்டது.

இளம்வயதினர் அரச அலுவலகங்கள் அமைந்துள்ள பகுதிகளுக்கு செல்லவே அஞ்சுவதாகவும் கூறப் பட்ட.து (உ-3)

### கரும்புலி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னன்ட் எடிசன்

★ இரண்டாம் லெப்டினன்ட் ஞானகுமார்
★ இரண்டாம் லெப்டினன்ட் பிரியகீர்த்தி
★ இரண்டாம் லெப்டினன்ட் உமாகாந்த்
★ இரண்டாம் லெப்டினன்ட் பாக்கியராஜ்
★ வீரவேங்கை ஆதித்தன்
★ வீரவேங்கை மதியவாசன்
★ வீரவேங்கை நிவேந்தராஜ்
★ வீரவேங்கை உதயகீதன்
★ வீரவேங்கை இன்பரூபன்

(உ-3)

# படையினர் ஈட்டிய யாழ். வெற்றி போர் முடிவதற்கான அறிகுறி அல்ல

## லண்டன் பத்திரிகை கருத்து

லண்டன், டிச. 7

யாழ். நகரை படையினர் கைப்பற்றியது தொடர்பான செய்திகளை லண்டனில் வெளியாகும் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்து நேற்று பிரசுரித்திருந்தன.

தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே 12 ஆண்டுகளாக நடந்து வரும் இனப் போரில் யாழ்ப்பாண வீழ்ச்சி ஒரு திருப்பம் என்றாலும்; யாழ்ப்பாண வெற்றி போருக்கு முடிவை கொண்டு வருவதற்கான அறிகுறி அல்ல. விடுதலைப் புலிகளை அழிப்பது இராணுவ ரீதியில் இயலாத விடயமாக இருக்கும் — என்று ''த இன்டிபபென்டன்ற்'' நாளிதழ் தெரிவித்துள்ளது,

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள காடுகளில் அவர்கள் சுதந்திரமாகச் செயற்படுகின்றனர். அது கெரில்லா போருக்கு மிக உகந்தது. அத்துடன் யாழ்ப்பாணத்தில் இருந்து கூட்டிச்சென்ற தமிழ் மக்கள் என்ற இன்னோர் ஆயுதமும் புலிகளிடம் இப்போது இருக்கிறது என்றும் ''இன்டிப்பென்டென்ற்'' செய்தித்தாள் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

### அனுமதி

யாழ். ஆஸ்பத்திரி அமைய தொழிலாளர்கள் 12 பேர் தொடர்ந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலேயே கடமையாற்ற அனுமதிக்கப் பட்டுள்ளனர். (ஐ-117)

### அதிரடி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் மூன்றரை மணி நேரம் நடைபெற்ற கடும் சண்டையில் படையினரின் முகாம் கடும் சேதத்துக்கு உள்ளாக்கப்பட்டது. மூன்று பவள் கவச வாகனங்களும் தாக்கி அழிக்கப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் மூன்று பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள், இரண்டு சப் இன்ஸ்பெக்டர்கள் உட்பட 29 அதிரடிப் படையினர் உயிரிழந்ததாகவும் —

இருபது அதிரடிப் படையினர் படுகாயமுற்றதாகவும்—

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது. (உ-3-6)

### வெற்றிக்கு உதவிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சரித்திர சாதனை என்ற பாணியில் அவரது உரை அமைந்திருந்தது.

அந்த உரையில் சந்திரிகா குறிப்பிட்ட முக்கிய அம்சாங்களின் சுருக்கம் வருமாறு:-

★ இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்'த — சிறப்புமிக்க செய்தியை நாம் பெருமிதத்தோடு ஏற்றுக்கொள்கின்றோம்.

★ இந்த வெற்றி மூலம் சமாதானத்தையும் சுபீட்சத்தையும் நோக்கி நடைபோடுவதற்கான வழியைத் திறந்துவிட்டுள்ளோம்.

★ நாட்டைக் கூறு போடுவதற்கு எதிராகவே நாம் போர் தொடுத்தோம்.

★ போரின் முதலாவது கட்டத்தில் வென்றுள்ளோம். யுத்தத்தில் முடிவு கண்டு நிலையான சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்ள இன்னும் நீண்ட பயணத்தை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

★ இந்த மாபெரும் வெற்றிக்கு சகோதர சிங்கள மக்கள் நல்கும் ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும்தான் காரணம் என்று நான் கூறவிரும்புகிறேன்.

★ எமது சமதான முயற்சிக்கு சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லீம், மலாய், பறங்கி மக்களும் அவர்களது கட்சிகளும் ஆதரவளித்துள்ளன. புலிகள் மட்டுமே எமது சமாதான முயற்சிகளுக்கு எதிராக தாக்குதலை மேற்கொள்கின்றனர்,

அதனாலேயே அவர்களைத் தோற்கடிக்க எமது சமாதான செயல் முறையை சமாதானப் போராட்டமாக மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

★ எமது சமாதான செயல் திட்டத்தை ஏற்காமல் யுத்தத்தைத் தொடர சிலர் இன்னும் விரும்புவார்களேயானால் அந்த சவாலை எதிர்கொள்ளக் கூடியதாக எமது படைகள் சகல வழிகளிலும் உஷார் நிலையில் வைக்கப் பட்டிருக்கும்.

★ தமிழ் மக்களின் பிரச்சினைகளை எமது அரசாங்கம் சரியாகப் புரிந்து கொண்டது. சரித்திர ரீதியாக அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும், யுத்தம் காரணமாக அவர்களுக்கு ஏற்பட்ட வசதியீனங்களையும் கண்டறிந்து அவற்றுக்கு நிலையான தீர்வுகளை காண நாம் இதய சுத்தியுடன் சில நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

அதன் உச்ச கட்டமாக எமது அரசால் சமர்ப்பிக்கப் பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் திகழ்கின்றன.

★ தமிழ்மக்களுக்கு ஏற்பட்டுள்ள அநீதிகளுக்கு இதய சுத்தியுடன் தீர்வுகளை காண்பதற்கு எமது அரசாங்கம் முன்வந்துள்ளது.

★ யாழ்ப்பாணத்தை விட்டுச் சென்ற அனைவரும் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு வந்து சுதந்திரமாக வாழுமாறு அழைப்பு விடுக்கின்றேன். அதற்கு வேண்டிய சகல சிவில் வேலைகளையும் நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம். அவர்களின் பாதுகாப்புக்கும் எனது அரசு உறுதியளிக்கின்றது.

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களையும் எமது அரசாங்கத்திடம் சரண் அடையுமாறு அழைப்பு விடுக்கிறேன். அவர்களின் பாதுகாப்புக்கும் உறுயதிளிக்கிறேன். — என்று தெரிவித்தார். (உ-3)

### கடும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் எண்ணிக்கையான பொலீஸாரும், துருப் க்களும் அங்கு கொண்டுவந்து குவிக்கப்பட்டிருந்தனர்.

காலிமுகக் கடற் பகுதியில் கடற்படைப் பீரங்கிப் படகுகள் அங்கும் இங்குமாக ரோந்தில் ஈடுபட்டு பாதுகாப்பு வழங்கியபடி இருந்தன.

ஜனாதிபதியின் உரையைக் கேட்பதற்கு அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், எம்.பிக்கள், உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரமுகர்கள் என பெரும் எண்ணிக்கையா னோர் திரண்டிருந்தனர். (உ-ஐ-3)


## இடமாற்றம்

### ச. லிங்கநாதன் வண்ணச்சோலை
### (G.S. LINGANATHAN & CO.)

13, 14 பெரியகடை வீதி, யாழ். நகரில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் கடந்த 20-11-1995 முதல் **சாவகச்சேரி நவீனசந்தை உட்புறம் அமைந்துள்ள 19 ஆம் இலக்கக் கடையில்** தொடர்ந்து இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளருக்கும். ஆதரவாளர்களுக்கும் அறியத்தருவதில் மன மகிழ்ச்சியடைகிறோம்.

நிர்வாகம்
ச. லிங்கநாதன் வண்ணச்சோலை

(சி/ 3128)

## இடமாற்றம்

### ராசி சில்க்ஸ்

யாழ். நவீன சந்தையில் அமைந்திருந்த எமது ஸ்தாபனம் கொடிகாமம் புகையிரத நிலையம் முன்பாக இயங்க ஆரம்பித்துள்ளது என்பதனை அன்புக்கினிய வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்.

(சி/3131)

**PolioPlus**

மீண்டும்
போலியோத் தடுப்பு மருந்து

### பெற்றோர்களே! ஆயத்தமாகுங்கள்!!

### நாளை மறுதினம் சனிக்கிழமை

**உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் ஆற்ற வேண்டிய அத்தியாவசிய கடமை நினைவிருக்கிறதா?**


## மரண அறிவித்தல்கள்

### மயில்வாகனம் தனராசா

(ஓய்வுபெற்ற நீர்ப்பாசன ஓவசியர்)

இவர் யாழ்ப்பாணம் சுண்டிக்குளி இல. 30 விதானையார் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற சிவஞானமணியின் அன்புக் கணவரும், தனேஸ்வரி (துரையப்பா மகா வித்.), ஞானேஸ்வரி (அவுஸ்ரேலியா), யோகராணி (கனடா), செல்வராணி யாழ். மாநகர சபை, வேலைப்பகுதி), திருக்குமாரன் (நீர்வள சபை), சிவராணி (சாந்தீகம்), இந்திராணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், செல்வரட்ணம் (கொழும்புத்துறை இந்து மகாவித்.), தர்மசேகரம் (அவுஸ்ரேலியா), சிவானந்தன் (கனடா), சேகரன், இராகினி (ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும், டினேஸ்குமார் (கனடா), சிவாம்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வரணி மாசேரியில் வசிக்கும் திரு. கந்தையா குமாரசாமி என்பவரது வீட்டில் இன்று (7 - 12 - 95) காலை 10.00 மணிக்கு நடைபெற்று கம்பத்தை மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறுமென்பதை அறியத்தருகின்றேன். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தகவல்:
த. திருக்குமாரன்
(மகன்)

தற்போதைய விலாசம்:
C/o க. குமாரசாமி,
வரணி, மாசேரி.
வரணி.

(39468)

### திருமதி கிருஷ்ணர் கனகம்மா

கோட்டைக்காடு, சுன்னாகத்தைச் சேர்ந்த கிருஷ்ணர் கனகம்மா [6-12-95] நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற க. கிருஷ்ணரின் அன்பு மனைவியும், மகாதேவன் (அதிபர்), சுப்பிரமணியம், கோகிலநாதன் (அமெரிக்கா), பத்மநாதன், யோகநாதன் (ஜேர்மனி), மனோன்மணி, நகுலாம்பிகை, விமலாம்பிகை, காலஞ்சென்றவர்களான தேசிகநாதன், சிவபாக்கியம் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (7-12-95) கைதடி நவபுரத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா. சந்திரன்
(மருமகன்)

தற்காலிக முகவரி:
இ. கோகிலநாதன்
கைதடி வடக்கு,
நவபுரம்.

(39471)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 7-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org